# மணிஓசைகள்



அபூர்ராஜன்

# மணி ஓசைகள்

அபீர்ராஜன்

வெளியீடு

பலாலி ஆசிரிய கலாசாலை
தமிழ் மன்றம்
திருநெல்வேலி

## சமர்ப்பணம்

என்னை வளர்த்து ஆளாக்கி
என்வாழ்வின் உயர்வுக்காய்
அரும் முயற்சிகள் செய்து
என்வாழ்வின் உயர்ச்சியை
விண்ணிலிருந்து களிப்பெய்தும்
என் அன்புத் தந்தை
அமரர் ஆசீர் அன்ரனிக்கு

---

நூல்:- மன ஓசைகள்
நூலாசிரியர்:- அன்ரனி பீற்றர்
(அபீர்ராஜன்)
முகவரி:- 49. (25) கோவில்வீதி, யாழ்ப்பாணம்
வெளியீடு:- தமிழ் மன்றம்
பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை
யாழ்ப்பாணம்
முதற்பதிப்பு:- 29-10-1999
அச்சமைப்பு:- மணி ஓசை பதிப்பகம்
12, சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.

விலை:- 50/-

# அணிந்துரை

அபீர்ராஜனின் 'மன ஓசைகள்' என் பார்வைக்கு வந்தன. ஓர் இளங் கவிஞன் தன்னைச் சூழ நிகழ்பவை பற்றி, சமயம் பற்றி, கடவுள் பற்றி, கல்வி பற்றி, மானிடநேயம் பற்றியெல்லாம் சிந்தித்ததன் விளைவு இத்தொகுதி என்பதை உணர முடிகிறது.

'இன்னவைதாம் கவியெழுத ஏற்றபொருள்' என அறுதியிட்டுச்சொல்ல யாரால் முடியும்? ஒரு படைப்பாளியின் உள்ளத்தைத் தொடும் கிளர்ந்தெழச் செய்யும். எதுவும் பாடுபொருள் ஆகலாம். ஏன், கவிதை பிறக்கின்ற அந்தப் பொருள்பற்றித் தான் பாடப் போவது தெரியாமல் இருக்கலாம்.

காகம் கரைவதையும், சிற்றெறும்பு நிரையாகச் செல்வதையும் காணுகின்ற கவிஞன் பாடுகிறான்:

"காகம் கரைந்து கூட்டங் கூடி
காதில் சொல்லும் சேதி என்ன?
கற்ற அறிவை மற்றவர்க்கும்
கற்றுக் கொடுக்க வேண்டுமென்று

சிற்றெறும்பு நிரையிற் சென்று
செப்புகின்ற சேதி என்ன?
புத்தியுள்ளோர் பொறுப்புடனே
பணிகள் புரியவேண்டுமென்று"

போரும் பூசலும் இல்லாத இலட்சிய உலகத்தை அவாவுதல்—கனவு காணுதல் — கவிஞர் இயல்பு

''அடிபிடிகள் ஓயாதா?
அமைதி வந்து பிறக்காதா?''

என்றும்,

''என்று தணியும் இந்த
இனப்புயல் வேகம்?
என்று கலையும் இந்த
போர்ப்பறை மேகம்?''

என்றும் ஏங்குகிறார் கவிஞர்.

இத்தொகுதியிலேயே அற்புதமான வார்ப்பாக அமைந்த கவிதை 'பெலிக்கான்பறவை' அன்னை தெரேசாவின் புகழ்பாடும் புதுக்கவிதை இது.

...வெள்ளை நிலா ஒளிக்கீற்று
சேரிக்குளத்தை நிறைத்ததினால்
அனாதை அல்லிகள் மலர்ந்தன
தெருவோரத்தின் காகிதக் குப்பைகள்
அன்னை இல்ல ஆலையில் சேர்ந்து
அழகிய நூல்களாய் வெளிவந்தன...''

தற்புதுமையான உருவங்கள் இக்கவிதையை அணிசெய்கின்றன.

அபிர்ராஜன் இத்துறையில் மேலும் சாதனைகள் ஈட்ட வாழ்த்துகின்றேன்.

கவிஞர் சோ. பத்மநாதன்
அதிபர்

பலாலி ஆசிரிய கலாசாலை,
திருநெல்வேலி.
30-08-99

# பாராட்டுப் பதிகம்

மன்னாரின் மாதோட்டச் சொத்து யாழூர்
மண்ணினிலே வாழுகின்ற பிற்றர் ராஜன்
தன்மனத்தின் ஓசைகளைத் தமிழ் விருந்தாய்த்
தந்தெமக்கு மகிழ்கின்றார் தகித்துப் பொங்கும்
இன்னலிடை இன்றையசூழ் நிலையின் சாயல்
இதயத்தின் குமுறல்களாய் எழுத்திற் பேசும்
கன்னல்பிழிந் தெடுத்த சுவைத் துளிகளாலாம்
காதைகளின் கருத்துரைக்கும் கவிகள் காண்போம்

எங்கள் தமிழ்மொழிச்செந்தேன் இனிமை கூற
எப்படித்தான் பொறுப்பாரோ? என்ற கேள்வி
இங்கிதுதான் நல்முத்து எங்கள் சொத்து
ஏற்றிடுவீர் எனக்கரத்தே ஏந்தித் தந்தார்
பொங்கல் விழாத் தமிழ்த்திருநாள் கண்டு நெஞ்சம்
பூரித்தே புத்தாடை புனைய வைத்தார்.
அங்கமெலாம் உணர்வலைகள் அரும்பச் செய்தார்
அடையாளங்கள் பலகாண அழைத்துச் சென்றார்

பெருகிவரும் தண்டனைகள் உருவங் காட்டிப்
பின்புலக நலமோளிர இறையோன் பாதம்
கருணைதனை வேண்டிடுவோம் என்றார் மீண்டும்
கலங்காதீர் நலமே உண்டு கடன் கொடுங்கள்
வரவுயரும் ஆண்டவனின் வங்கி உண்டு
வாழவழி இதுவேதான் என்றுரைத்தார்
இருளகல விதிசெய்வோம் சமுதாயத்தின்
இளம்பரிதி நாமென்றே எழுச்சியீந்தார்

இத்தரையிற் சித்திரையே வரவேண்டும் நீ
எத்திசையும் சத்தியமே இலங்க வேண்டும்
மெத்திடும் வீணதேவன் முறைகளுக்கோர்
விடுதலை நாம் பெறவேண்டும் விடிவு காண்போம்
உத்தமர்கள் பொங்கி எழவேண்டும் பொய்மை
உண்மையென நடமாட விடுதல் கேடு
சித்தமிதில் ஆழ்ந்தொரு கணம் தான் இங்கு
சிந்திப்போம் என்றுணர்வே செழிக்க வைத்தார்

போராட்டந்தான் மிச்சமா? இதுதான் வாழ்வா?
புகலுங்கள் கனியிருக்கக் காயெதற்கு?
ஊர்வனவும் பறப்பனவும் விலங்கு தானும்
உங்களுக்குச் சொல்லும் சேதி என்ன?
ஆருயிர்கள் அகதிநிலை அச்சம் நீங்க
அடிபிடிகள் ஓயாதா? விடியல் எங்கே
ஆர் தலைவன் ஒரு புதிய பாதை காட்டி
அஞ்சாது செயலாற்ற எனக்கேட்கின்றார்

மூத்தமிழ் எங்கெங்கும் முழங்க வேண்டும்
மூலதனம் கல்வியதில் எழுச்சி கொள்வோம்
எத்தர்கள்தம் சூழ்ச்சியிடர் வலைகள் சூழ்ந்தால்
இனி எங்கே சுதந்திர ஒளி பிறக்கும்?
சித்மிசைப் பதறாத காரியம் தான்
செயற்கரிய காரியங்கள் சிறக்கச் செய்யும்
சுத்தமுற ஓ மானிட சமுதாயமே
சுற்றத்தார் உன்பங்கை உணரென் கின்றார்.

என்றுதணியும்? இனப்புயல் வேகமென்றே
ஏங்கினார் அழிந்திடாச் செல்வம் கல்வி
வெற்றிதரும் ஏன் இன்று இந்தநிலை?
வேந்தர்களாய் ஆண்டகுலம் வீழ்ந்ததேனோ?
நன்றுசெய் இரும்பாகும் கரும்பாகும் நம்
நாட்டில் இளம் சந்ததியை உயர்த்த வேண்டும்
ஒன்றுரைப்பேன் இரகசியம் உண்மை போற்றி
உயர்வடைவீர் என்றுணர்வும் ஊட்டுகின்றார்

உயர் வாழ்வு உள்ளத்தின் உயர்வே யாகும்
ஒரு கடுகு விசுவாசம் ஏழ்மை போக்கும்
அயர்வேனோ? ஆண்டவனும் அகதி தான்
அறந்தன்னை உயிர்ப்பிக்கும் சத்திய வேள்வி
முயன்றிடுவோம் மூர்க்கரை எத்தனை
முறையும் மன்னிக்கலாம் சமுதாயத்தில்
இறையோனின் சேவகர்தாம் ஆசிரியர்
எழுத்தறி வித்தவர் ஏற்றம் சொன்னார்.

மாதவம் செய்ததோ? மாடடை குடிலென
மாபரன் புகழ்பாடிப் பல் கலை
ஏறாத பல்துறை ஞானிபிர காசராம்
ஏழைகள் தோழனின் இதயமே வாழ்த்தினார்
வேதனைப் பெலிக்கான் பறவையின் சாதனை
விந்தைகள் சிந்தையில் விதைத்தமை மட்டுமா?
பாரதிகள் பிறந்திட வேண்டும் ஏன் ஏற்பதில்லை?
பத்தாண்டில் என்று பலகவிதை யாத்தார்

பிள்ளைமனம் பெற்றமகன் தியாகத் தீபன்
பேசுதற்கும் பழகுதற்கும் இனிய ரூபன்
உள்ளமதன் துடிப்பெல்லாம் அபீர் ராஜன்
உங்கள் முன் படைத்துள்ளார் உணர்ச்சி வேகம்
தெள்ளுதமிழ் வெள்ளமெனக் கொள்ளை கொள்ளத்
தித்திக்கும் பாடல்களின் திறமை உண்டேன்
மெள்ள மெள்ள நல்ல எதிர் காலம் மேவி
மேன்மையுற வாழ்த்துகின்றேன் வளர்க! வாழ்க!!

— யாழ் - ஜெயம்

# என் மன ஓசைகள்

'என் நெஞ்சத்தில் அரும்பிய ஆசைகள் - கலை
ஆர்வத்தால் கருக்கொண்ட கருத்துக்கள் என்
எண்ணத்தில் உருக்கொண்ட கவிதைகள் - எழில்
வண்ணத்தில் எழுந்திட்ட மன ஓசைகள்''

கவிதை எனக்கு கரும்பு. கண்களும், செவிகளும் என்கருத்தைத் தூண்டும். பாலப் பருவம் பாடவும், ஆடவும் பல களங்கள் இடம் தந்தன. அப்போது கவிதை பற்றி ஏதும் தெரியாது. ஆனால் ... இலக்கிய ரசனை கவிதைத் துறைக்கு ஈடுபாடு கொள்ள வைத்தது. பாடசாலைப் பருவம் முடிந்து வாழ்க்கைப்பருவம் தொடங்கியது. வாழ்க்கையின் சுழிவு, நெழிவுகள் வாழ்வுச் சிக்கல்கள், நெருக்கீடுகள், நிம்மதியற்ற நிலைகள் சமுதாயப் பார்வைக்குள் திருப்பின என்னை நினைவலைகளின் தூண்டுதலால் அவ்வப்போது அவற்றிற்கு எழுத்துருவம்கொடுத்தேன்.

பாதுகாவலன், புதிய உலகம், உதயன், சஞ்சீவி, ஈழநாதம் பத்திரிகைகளுக்கு அனுப்பிய கவிதைகள் அனைத்தும் வெளிவந்து, அபிமானிகளின் பாராட்டும் கிடைத்தன. பாராட்டுக்கள் மேலும் எனக்கு ஊக்கமளித்ததால், தொடர்ந்து எழுதினேன். மூத்த கவிஞர்களின் அறிவுரைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டேன். எழுதிய ஆக்கங்களைக் காட்டி வழிநடத்துதலும் பாராட்டும் பெற்றேன். அடிக்கடி நண்பர்கள் ஏன் எழுதவில்லை என்று தட்டிக் கொடுப்பார்கள், அவையும் எனக்கு ஊக்கம் ஊட்டின. நான் எழுதிய முதல் கவிதையே ''ஏரினைப் பூட்டி'' என்ற கவிதை 1983 வெளிவந்தது. நான் கவிதை உலகுக்குள் புகுவதற்கு வழியாகியது.

கவியரங்குகள், சிறு நாடகங்கள், சிறுவர் பாடல்கள் எழுதித்தரும்படி நண்பர்கள் கேட்டதனால் அவற்றை எழுதவும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. அவற்றிலும் பல சிறுவர் பாடல்கள் அச்சாகி வெளியாகின, வாழ்த்துப்பாக்கள், இரங்கல்பாக்கள், நினைவுப் பாக்களும் என்னைப் பக்குவப்படுத்தியுள்ளன. பல கைவசம் இல்லாமல் போனதாலும் இருப்பவற்றை என் மன ஓசையாக வெளியிட எப்போதோ ஆவல்கொண்டேன். பொருளாதாரம் இடந்தரவில்லை. இன்று பல சிரமங்கள் மத்தியில், பல அன்பர்கள், நண்பர்கள் ஆதரவுக்கரம் நீட்டினார்கள், அச்சிடும்படி ஆக்கமும் ஊக்கமும் தந்தார்கள். அவ்வாறு ஆக்கமும் ஊக்கமும், உதவியும் தந்த கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத் தலைவர் திரு. துரை ஆரோக்கியதாசன் (ஓய்வுபெற்ற பலாலி ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர்), செயலாளர் யோசப் பாலா, பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் திரு. குயின்ரஸ் திருஞானம் என்போரை நான் நன்றியோடு நினைவுகூருகிறேன்.

'மன ஓசைகள்' கவிதைத் தொகுதிக்கு அணிந்துரை தந்த மூத்த கவிஞர் சோ. பத்மநாதன் (பலாலி ஆசிரிய கலாசாலை முன்னாள் அதிபர்) பாராட்டுப் பதிகம் வரைந்த மூத்த கவிஞர் யாழ் ஜெயம் (விக்ரர்) அவர்களையும், அறிமுக உரைதந்துமுகப்பு அட்டை அழகுற உதவிய மறைக்கல்வி இயக்குனர் அருட்தந்தை R. C. X. நேசராஜா அவர்களையும், அட்டைப் படத்தை கருத்துடன் வரைந்து தந்த நண்பன் டோமினிக் ஜீவாவையும், அச்சமைப்பு செய்த மணி ஓசை அச்சகத்தாரையும், இன்னும் உதயன், சஞ்சீவி, பாதுகாவலன், புதிய உலகம் ஈழநாதம் பத்திரிகைகளின் ஆசிரியர்களையும், வெளியீடு செய்ய அனுமதி வழங்கிய ஆசிரிய கலாசாலை தற்போதைய அதிபர் திரு. கு. சதாசிவமூர்த்தி அவர்களுக்கும், வெளியீடுசெய்யும் தமிழ் மன்றத்தினரையும், கவிதைத்தொகுதி வெளிவர பல வழிகளிலும் உதவிய அன்பர்கள் அனைவரையும் நன்றியோடு நினைவு கூருகின்றேன். உங்கள் கரங்களிற்கு மன ஓசையைத் தருகின்றேன் உங்கள் ஆதரவைத் தாருங்கள்.

49, (25) கோவில் வீதி,
யாழ்ப்பாணம்

அன்புடன்
**அபீர்ராஜன்**

# இறை வணக்கம்

அப்பனே இறைவா
அன்புநிறை தேவா
முப்பொழுதும் என்னை
மூவனாய் நின்று
தப்பாது காத்து
தடுத்தாட் கொள்பவனே
எப்பொழுதும் உந்தன்
அருள் வரந்தாராய்!

இறைஞான மறையோனே
இகம்மேவி இசைபாட
கறையாவும் மறைந்தோட
கனிவான வளம் சேர
நிறைவான பொருளோடு
முறையாகக் கவிபாட
துறையாவுங் கடந்தோனே
துணையாகி அருள்தாராய்!

# எங்கள் தமிழ் மொழி

ஈராயிரமாம் ஆண்டுகள் முன்னே
இகமதில் உதித்த எம்தமிழ்!
சீராகச் சங்கத் தொட்டிலிலே
சிறப்போடு வளர்ந்த செந்தமிழ்!
போராடி வென்ற தேசமெல்லாம்
புகழோடு அரசாண்ட பைந்தமிழ்!
வேரோடி யின்று வெளிநாட்டினிலும்
வீரமுழக்கஞ் செய்யும் வெற்றித்தமிழ்!

இன்னு மோரிரு ஆண்டதனிலே
இணையில்லாப் பல சாதனையாலே
தன்னிகரில்லா மொழிகளி லேயெம்
தமிழ்மொழி யொன்றாய்த் தடம்பதிக்கும்
அந்நியமண்ணின் அரியா சனத்திலும்
சரியா சனத்தில் அமர்ந்திருக்கும்
க(ன)டா நாட்டு அரசியல் தனிலும்
கலந்த தமிழர்தம் அரசிருக்கும்.

காத்திரமான பலதுறை தனிலும்
கணனித் தமிழும் கரைபுரளும்
சாத்திரம் பார்த்திடும் தமிழர் மரபு
சரித்திரம் படைப்பதில் முன்னிருக்கும்
சூத்திரப்படியே இலக்கணத் தமிழும்
சுவைகுறையாது நிலைத் திருக்கும்
எத்தனை தடைகள் வந்திட்ட போதிலும்
அத்தனையும் தாண்டி வழிநடக்கும்

# நல் முத்து

விண்ணவன் தந்தநல் முத்து — தூய
விவிலியம் எங்களின் சொத்து
தோண்டிட ஊறிடும் கேணி — அதைத்
தொழுவோரை உயர்த்திடும் ஏணி
வேண்டுவோர் பெறுவார் மீட்பு - நாணி
விலக்குவோருக்குத் தண்டனைத் தீர்ப்பு
உண்பவர் தொடர்வார் பயணம் — அதை
நண்ணுவோருக்கோ நாழுமே மரணம்.

நடந்திடு சிலுவையின் பாதை — தினம்
திடந்தரும் தேவனின் வார்த்தை
இடங் கொண்டோம் வேறு பேதகம் — நம்
வாழ்க்கையே அதற்குப் போதகம்
கடந்திடு தீமையை வார்த்தையால் — தினம்
நடந்திடும் வாழ்வுமிக நேர்த்தியாய்
நடத்திடுவோம் விவிலியப் பாதை நாளும்
தீர்ந்திடும் எங்களின் உபாதை.

அலைமோதும் வாழ்க்கையின் திசைகாட்டி — எம்
ஆன்மீகப் பயணத்தின் வழிகாட்டி
மலைபோல துன்பங்கள் வந்தாலும் — அவை
ஒளிகண்ட இருள்போல பறந்தோடும்
மலைமேல் ஒளியாக நாம்வாழ — எமை
மறைவாழ்வில் உருவாக்கும் மெருகூட்டி
விலையில்லாத வித்தைநாம் விதைத்திடுவோம் — எம்
வேதனின் களஞ்சியத்தை நிறைத்திடுவோம்

# தமிழர் திருநாள்

ஏரினைப் பூட்டி பாரினை உழுது
நீரினைப் பாய்ச்சி நெல்லினை விதைத்து
பயிரினைக் காத்துப் பணிபல புரிந்து
அறுவடை செய்து அவனிக்கு மளித்து
மனையினில் சென்று மனைவி மக்களுடன்
உண்டு மகிழ்ந்திடும் உழவன் திருநாளாம்

ஏரினை இழுத்திடும் எருது மாடுகட்கும்
பொலிவிளைப் பொழிந்திடும் பூமாதேவிக்கும்
நலம்பல கூறி நன்றி நவின்றிட
புத்தாடை யணிந்து பட்டாசு கொழுத்தி
புதிய பானையிலே பொங்கலும் பொங்கி
புவியினில் மகிழ்ந்திடும் பொங்கல் திருநாளாம்

பலகுடை மன்னரும் பணிந்து வாழவும்
பாரினில் பல்தொழில் படைப்போர் வாழவும்
வேதம் ஓதிடும் வேதியர் வாழவும்
சாகமளித்துச் சகந்தனைக் காத்திடும்
பருவங்கள் மாறினும் பண்பாடு மாறாத
தமிழர் திருநாளே தைத்திரு நாளாம்

# அடையாளங்கள்

கனிவான பார்வையும்
இதமான வார்த்தையும்
காதலர்க்கு அடையாளம்
கிளிபோல மொழி பேசிப்
புலிபோல மாறிடுவோர்
காமுகர்க்கு அடையாளம்

பரிவான உள்ளமும்
பிரியாத நெஞ்சமும்
பாசத்தின் அடையாளம்
பகையாளி யானாலும்
விருந்தாளி யென எற்றல்
மன்னிப்பின் அடையாளம்

கடுகுமணி யானாலும்
களவாட நினையாமை
கண்ணியத்தின் அடையாளம்
அடுத்தவரின் பொருளென்று
அறிந்தபினும் அமுக்குவது
அயோக்கியனின் அடையாளம்

மலைபோலக் கிடைத்தாலும்
மறந்தும் பொய் கூறாமை
நேர்மையின் அடையாளம்
கொண்டவனின் பாதமே
தஞ்சமென வாழுதல்
குலமகளுக்கு அடையாயம்

மாடாக உழைப்பவனை
மகன்போல மதித்திடுதல்
முதலாளிக்கு அடையாளம்
வாங்குகின்ற கூலிக்கு
வஞ்சமின்றி உழைப்பதே
தொழிலாளிக்கு அடையாளம்

இடுக்கண் வரும்போது
இன்னலைத் துடைப்பவன்
உயர் நட்புக் கடையாளம்
பொல்லாத ஆசையினால்
இல்லாதது செய்திடுதல்
அழுக்காற்றின் அடையாளம்

தன்னல மதுபோலப்
பிறர்நலம் பேணுபவர்
நன் மனிதர்க்கு அடையாளம்
இரக்கமும அன்பும்
இருப்பவபவர் எல்லோரும்
இறைவனின் அடையாளம்

## எப்படித்தான் பொறுப்பாரோ?

காலமெல்லாம் தவமிருந்து கடவுளிடம் வரம்வேண்டி
ஆசைக்கு ஆண்பிள்ளை அருமையாகப் பெற்றெடுத்து
அறிவுவளர்ச்சி பெற அமுதான கலையூட்டி
பாசக் கோட்டையிலே பக்குவமாய் வளர்த்துவந்த
நேசப் பெற்றோர் முன் நேசனைப் பறிகொடுக்க
யார்தான் பொறுப்பாரோ எப்படித்தான் பொறுப்பாரோ?

பகலிரவு பாராது பட்டினியால் மிக நொந்து
கஷ்ரப் பட்டுழைத்து காணிபூமி தமைவிற்று
மேலான வாழ்வையெண்ணி மிச்சம் பிடித்துவைத்து
வெளிநாடு பறந்தோடி வேலைதேடச் சென்றோரின்
காசையும் பறித்தெடுத்துக் கைதிகளாய் வைத்திருந்தால்
யார்தான் பொறுப்பாரோ எப்படித்தான் பொறுப்பாரோ?

அன்பான குடும்பம் அலைக்கழிந்து போகாமல்
பண்பாட்டுடனே பலகாலம் வாழவெண்ணி
என்போடு தசைநோக அரும்பாடு பட்டுழைத்துத்
தெம்பான வீட்டினையும் தேடிய பொருள்களையும்
வம்பான செய்கையினோர் வஞ்சனையாலே கவர்ந்தால்
யார்தான் பொறுப்பாரோ எப்படித்தான் பொறுப்பாரோ?

வேலைக்குச் சென்றவர்தான் வீடுவரவில்லையென
மாலைவரை காத்திருந்து மங்கையவள் கதறியழ
வீதியெல்லாம் குத்தகைக்கோ விலைக்கோ வாங்கி
விட்டவர் போல்
மூலைகளாய்ப் பார்த்துநின்று மூர்க்கத்தனம்
செய்கின்றார்
நாதியில்லை யென்றோ நாயைப்போல் கொல்வதனை
யார்தான் பொறுப்பாரோ எப்படித்தான் பொறுப்பாரோ?

வேளைக் குணவுமில்லை வேலைசெய்ய இடமுமில்லை
மாலையிலே ஒளியேற்ற மண்ணெண்ணை
விளக்கிலில்லை
சாலையிலே செல்லவென்றால் ஆமிவலம்
பெரியதொல்லை
ஆலையெல்லாம் மூடியதால் அடுப்பினிலே
புகையுமில்லை
யாரிடம் சொல்லுவதோ எப்படித்தான் சொல்லுவதோ
ஆண்டவன்தான் பொறுப்பாரோ எப்படித்தான்
பொறுப்பாரோ?

# தண்டனைகள்

காதலித்தல் பாவமென்றால்
கண்ணீர்தான் தண்டனையாம்
கல்யாணம் பாவமென்றால்
சீர்தனத்தால் தண்டனையாம்

கல்விகற்றல் பாவமென்றால்
உத்தியோகம் தண்டனையாம்
உத்தியோகம் இல்லையென்றால்
ஊரளத்தல் தண்டனையாம்

செலவழித்தல் பாவமென்றால்
சேர்த்துவைத்தல் தண்டனையாம்
சேர்த்துவைத்தல் பாவமென்றால்
பறிகொடுத்தல் தண்டனையாம்

அறிவுரைத்தல் பாவமென்றால்
அடக்குமுறை தண்டனையாம்
ஆதரித்தல பாவமென்றால்
அலைந்திடுதல் தண்டனையாம்

சேவை செய்தல் பாவமென்றால்
சிறைவாசம் தண்டனையாம்
உதவி செய்தல் பாவமென்றால்
உபத்திரவம் தண்டனையாம்

வேலை தேடிச் சென்றாலோ
வெளியேற்றம் தண்டனையாம்
சாலையிலே சென்றாலோ
ஆ(மி,சாமிகளால் தண்டனையாம்

# கருணைதனை வேண்டிடுவோம்

பகையிருள் நீங்கி எங்கும்
உறவொளி சுடர்விடவும்
பதட்டங்கள் நீங்கி நாளும்
பணிகளும் தொடர்ந்திடவும்
தாக்கங்கள் நீங்கி எங்கும்
ஆக்கங்கள் ஓங்கிடவும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடிவோம்

காமம் கொலை களவு
சுயமை ஒழிந்திடவும்
கடமை உணர்வுகள்
கண்ணியமாய்ச் செயற்படவும்
ஊழல் கலப் படங்கள்
ஓடி மறைந்திடவும்
காக்கும் இறைவனிடம்
கருணைதனை வேண்டிடுவோம்

தான தருமங்கள் எங்கும்
        தழைத்தே ஓங்கிடவும்
அன்பு அகிம்சை வழி
        அகில மெல்லாம் நிலைத்திடவும்
நீதி நேர்மை நெறி
        நிறையமைதி பெருக்கிடவும்
காக்கும் இறைவனிடம்
        கருணைதனை வேண்டிடுவோம்.

பஞ்சம்பசி நீங்கி யெங்கும்
        பசுமை கொளித்திடவும்
பகிர்ந்து வாழ்ந்து மனித
        மாண்பை மதித்திடவும்
பண்பில் சிறந்தோர்கள்
        பாரெல்லாம் தோன்றிடவும்
காக்கும் இறைவனிடம்
        கருணைதனை வேண்டிடுவோம்.

# நலமே உண்டு

வானிறைவன் படைப்பி லெல்லாம்
வனப்பு உண்டு
வளருகின்ற அன்பிலெல்லாம்
பிணைப்பு உண்டு
தன்னலமே யில்லாத சேவையென்றும்
தளைப்ப துண்டு
தனக்கே சேர்த்து வைப்பதினால்
தகிப்பே உண்டு

அன்புசெய்யும் உள்ளந் தனிலே
அகமகிழ்வு உண்டு
அறத்தின் வழி நடந்தா லென்றும்
அமைதி உண்டு
வம்புச் செய்கை வாழ்விலென்றும்
வளர்ச்சி இல்லை
வாய்மை யில்லா வாழ்விலென்றும்
வளருந் தொல்லை

உலகங் காட்டும் பாதையெல்லாம்
உண்மை இல்லை
கலகம் முழும் பாதையெல்லாம்
அமைதி இல்லை
நன்மை செய்து வாழ்ந்தாலென்றும்
நிறைவே உண்டு
நாட்டில் நீதி ஆட்சியாலே
நலமே உண்டு

# கடன் கொடுங்கள்

பொன்னும் மணியுமல்ல
பொருள் பண்டமல்ல - நீங்கள்
பொறுமையைக் கடன் கொடுங்கள்!
அமுக்கிக் குலுக்கியல்ல
அள்ளிச் சொரிந்துமல்ல - நீங்கள்
அன்பினைக் கடன் கொடுங்கள்
மாட மாளிகையல்ல
ஆடை அணியுமல்ல நீங்கள்
மன்னிப்பைக் கடன் கொடுங்கள்

காணி பூமியல்ல
காசு பணமுமல்ல - நீங்கள்
கருணையைக் கடன் கொடுங்கள்!
நகை மட்டுமல்ல
சொத்து சுகமுமல்ல நீங்கள்
நற்பண்பைக் கடன் கொடுங்கள்!
வாரியிறைத்து மல்ல
விழித்துத் துடைத்துமல்ல - நீங்கள்
வாய்மையைக் கடன் கொடுங்கள்!

வாழவழியின்றி நிதம்
வாடும் வறியோருக்கு - நீங்கள்
மானம் கடன் கொடுங்கள்
பணத்தை கடன் கொடுத்தால்
பிணம்வரைதான் கூடவரும் - நீங்கள்
குணத்தைக் கடன் கொடுங்கள்
குவலயமே வாழ்வுபெறும்!
அழிவுள்ள கடனையல்ல
அழிவில்லாக் கடன் கொடுங்கள் - உங்கள்
ஆண்டவனின் வங்கிக் கணக்கில் வரவுவரும்!

# விதி செய்வோம்

பெற்ற பெரும் பேறாம் நல்லறிவைப்
பேணிக் காத்து
கற்றறிந்தார். உண்மை களைக்
கருத்தாய்ச் சேர்த்து
நற்றவத்தார் நவின்ற மொழி
நலமாக கொண்டு
உற்றதொரு முறையிலே புது
நற்சமுதாயம் நாம் படைப்போம்!

எத்தனை ஆயிரம் பேதங்கள்
இழிவுகள் நமக்குள்ளே
அத்தனையு மிவை நமையரிக்கும்
அழிவுக் கூடமாம்
நித்தமொளி பரப்புமிள ஞாயிறதுபோல்
கற்ற அறிவொளி கொடுப்போம்
புத்தம்புது மலரெனவே மணம்பரப்பும்
நற்சமுதாயம் நாம் படைப்போம்!

எழுகின்ற இளம் பருதிகண்டு
இருள் அகலல் போல்
உழுத்தே படுத்த சமுதாய ஊறுகளெல்லாம்
உடைத் தெறிந்திடுவோம்
ஒழுக்கஞ் சேர் வாழ்வதனால்
விழுப்பங் கொள்வோம்
பழுதற்ற சமூகம் நலங்காணவே
நற்சமுதாயம் நாம் படைப்போம்

# வரவேண்டும் நீ

சித்திரைப் பெண்ணே வரவேண்டும்
சீருடன் நலம்பல தரவேண்டும்
சத்திரம்தேடி ஓடிய மாந்தர்க்குச்
சாந்தியை நீயும் தரவேண்டும்
நித்திரையின்றியே வாடிய எம்மவர்
நிம்மதி வாழ்வினைப் பெறவேண்டும்
இத்தரை மீதிலே இன்பமே பொங்கிட
பத்தரைப் பொன்னே நீ வரவேண்டும்!

மாடி மனைகளும் மண் குடில்களும்
மண்மேடு போல் ஆகின
தேடிய செல்வங்கள் சேர்த்துவைத்த பொருள்
ஓடின எம்மை விட்டு
வாடிய உள்ளங்கள் வலிமையடைந்திட
வாழ்வின் வசந்தமே வரவேண்டும்
பாடித் திரிந்தநாம் பட்ட பெரும்பாட்டைப்
பாரிற் பகர்ந்திட நீ வரவேண்டும்!

எத்தனை துன்பங்கள் பட்டோம் வாழ்வினில்
எல்லாமே நீங்கிட வரவேண்டும்
சத்தமில்லாமலே எத்தனை இரவுகள்
சமாதிகள் போல் இருந்தோம்
கத்தியமுதுமே எந்தக் கதியுமின்றி
காலங்கடத்தி வந்தோம்
சத்தியம் நிலைத்திட சாந்தியும் பெருகிட
சித்திரைப் பெண்ணே நீ வரவேண்டும்!

# வீணதே வன்முறை

ஆண்டவன் படைத்த அழகியவுலகம்
அமைதியின்றி அழிவுறல் முறையோ?
மாண்புடை உயிர்களை மாய்ப்பதினாலே
மாந்தரின் வாழ்வைத் திருத்திடலாமோ?
விண் புகழ் கொண்டுமே வாழ்வதினாலே
விரும்பிடும் வாழ்வைப் பெற்றிடலமோ?
பண்புடை வாழ்க்கை வாழ்வதினாலே
பாரிலே அமைதி தங்கிடுமாமே!

அன்னை பிதாவை அவமதிப் போர்கள்
அன்புடையோராய் வாழ்ந்திடுவாரோ?
தன்னருமகவைத் திருத்திடா தவர்கள்
சமுகத்தைத் திருத்த முனைந்திடலாமோ?
உன்னருங் குருவை உதாசீனம் செய்தால்
உன்வழித்தோன்றல் பின்னெதைச் செய்யும்?
சின்னவர் பெரியவர் மாண்பினை மதித்தால்
சிறப்புற வாழ்வு மலர்ந்திடுமாமே!

நல்லவர் வல்லவர் வழிமுறை காட்டிடின்
புல்லரும் புனிதராய் மாறிடுவாரே!
இல்லவர் உள்ளவர் ஏற்றங்கள் நீங்கிடின்
எங்குமே எதிலுமே இன்பமே தங்குமே!
மேலவர் கீழவர் பேட்டிமை நீங்கிடின்
வீணதே வன்முறை தானதே ஓடிடும்
எல்லோரும் ஒன்றென எண்ணங்கள் ஓங்கிடின்
எட்டியும் போட்டியும் எல்லாம் மறையுமே

# விடுதலை

பாவமே புகுந்த உலகில்
பகை மேகம் சூழ்ந்ததினால்
கோப குரோதச் செயல்
குவலயச் சொத்தா யாச்சு!
சாபமே வீழ்ந்த மனிதன்
சாவினை மதிக்க மறந்தான்
தாகமே கொண்டவன் போல்
தண்டிக்க அலைகின்றானே!
போதனை யாலே மனிதன்
புகழினைச் சேர்த் திட்டாலும்
சாதனை புரிந்து உலகில்
சரித்திரம் படைத் திட்டாலும்
சோதனை வந்தே தீரும்
சூனியக் காரன் மூலம்
வேதனை ஒன்றே மிச்சம்
விடுதலை யார்தான் தருவார்?
தலைமுதல் கால்வரை மனிதன்
தானென்ற அகங் காரத்தால்
மலைபோல் ஆசை யெல்லாம்
மனதிற்குள் நிறைத்து வைத்தான்
விலையில்லாச் சொத்தென் றெண்ணி
விரும்பியே விலங்கை யிட்டான்
சிலை போல வாழு மிவனைச்
சிறைமீட்போர் யாருமுண்டோ?
விடுதலை யாரோ தருவார்
விடிவினைக் காண் போமென்று
அடிமையாய் வாழ்ந்து வந்தால்
அழிவதே முடிவ தாகும்
கொடியவர் கொற்ற மகற்ற
கூட்டுற வாக நிற்போம்
அடிமையின் விலங் கொடிக்க
அணிகளாய் ஒன்று சேர்வோம்.

# பொங்கி எழவேண்டும்

தீயவினைகள் புகுந் தெங்கும்
    தீமைகள் மலிந் திருக்கையிலே
தூயநீதி வாய்மை யன்பு
    தொலைவில் நின்று பார்க்கையிலே
அபயமளிக்கும் ஆட்சி யெம்மை
    அகதி யாக ஆக்கையிலே
நேய மனத்தோர் பொங்கி யெழவேண்டும்
    நீதிநேர்மை நிலை பெறுவதற்கு!

பொய்மை நிறைந்த வையமிது
    புதுமைகள் காணத் துடிக்கிறது
வாய்மை யுள்ளோர் உள்ளமெல்லாம்
    வலிமை யிழந்தே நிற்கிறது
காய்க்கும் கழுமரங்க லெல்லாம்
    கனியு முன்னே முறிகின்றது
தாய்க்குலம் பொங்கியெழ வேண்டும்
    தர்மம் நியாயம் நிலைப்பதற்கு!

உலகம் விரைவாய்ச் செல்கின்றது
    உண்மைகள் பொய்யாய்த் தெரிகின்றது
கலகம் கலகமென்று சொல்லிக்
    கலப்பட நாடகம் நடக்கிறது
இலவுகாத்த கிளிபோல் நாம்
    இருந்தால் அழிந்து போவோமே
புலப்படும் தீமைகள் களைந்திடுவோம்
    பொங்கி யெழுந்தே செயற்படுவோம்!

# ஆழ்ந்தொரு கணம் ...

வரம்பில்லாத வயல் தனிலே — மேவி
வழிந்தோடிடும் நீரினைப் போல்
நரம்பில்லாத நாவதினால் — நாம்
நன்மைகள் பேசு கின்றோமா?
சுரமிழந்த பாவினைப்போல் - வாழ்வில்
சுகமிழந்து நிற் போர்க்குக்
கரங்கொடுத்து நிற்போமா — அவரைக்
கடந்து செல்ல நினைப்போமா?

நன்மை செய்ய மனமிருந்தும் — சுய
நலம் நினைந்ததனை வெறுத்தோமா?
உண்மை சொல்ல மனமிருந்தும் - சிறு
உவகைக் காயதனை மறுத்தோமா?
மேன்மை யுள்ளம் கொண்டோரை - நம்
மேட்டிமை யாலே உதைத்தோமா?
தீமை யென்று தெரிந்துமதைத் தேடிப்
பிறருக்குச் செய்வோமா?

உதவிசெய்தல் போல் நடித்து - பிறர்
உடைமையில் பாதியை உரிப்போமா?
பதவி மோகம் கொண்டே பிறரைப்
பழிவாங் கிடவும் நினைப்போமா?
பாவியான வாழ்க்கை வாழ்ந்தே - நாம்
படுகுழி தனிலே வீழ்வோமா?
ஆவி விட்டுப் பிரியு முன்னே - சற்று
ஆழ்ந்தொரு கணமிதை நினைப்போமா?

# போராட்டந்தான் மிச்சமா?

பொங்கு தமிழர் செல்வமெல்லாம் அழிந்து — வெறும்
போராட்டந்தான் வாழ்க்கையிலே மிச்சமா?
எங்கும் மக்கள் படுந் துயரந் தீர — நல்ல
எதிர்காலம் எங்களுக்கு இல்லையயா?
பங்கமான செயல்களெல்லாம் மறைந்து — நல்ல
பயிர்வகைகள் செழிக்குங் காலமில்லையயா?
திங்களொரு திங்களாக எண்ணி — நல்ல
தீர்வை எண்ணி ஏங்காதவ ரில்லையயா?

இன்பமான காலமெல்லாம் முடிந்ததா — இனி
வாழ்க்கையெல்லாம் துன்பத்தின் ஆட்சியா?
துன்பங்கள் தொடர்வதுதான் நியாயமா — இறை
தூயவனே இதற்கு முடி வில்லையயா?
வன்பகையில் முடிவதுதான் வாழ்க்கையா — இனி
வருங்காலமெம் மக்களுக்கு இல்லையயா?
நன்மை செய்வோர் ஒருவருமே இல்லையா — இங்கு
நாம் செய்வதெல்லாம் தீமையென்ற நன்மையா?

தெருக்கடைக் கோடியெல்லாம் வீடாச்சு - இது
தீர்க்கப்படாத ஓர் தீர்ப்பாச்சு !
உருப்படியான காரியங்கள் - இங்கு
உருவம் பெற்றே பல நாளாச்சு!
பொருட்களின் விலையும் மலையாச்சு — இதைப்
பொறுப்பதே எமக்குச் சுமையாச்சு!
இருட்டினில் வாழ்வதே நிலையாச்சு இங்கு
குருட்டு விளக்குகளே யெம் துணையாச்சு!

தூக்க மில்லாமலே இரவுகள் கழிந்து — சுக
தேகங்களெல்லாம் நோயாச்சு!
இக்கதி எவருக்கும் வந்துவிடும் — என்ற
ஏக்கமே விரக்தியின் விளிம்பாச்சு!
பக்குவமான மனங்களின் நிலையும் — பாதி
நம்பிக் கையை இழந்தாச்சு!
மக்களின் மனங்களோ கல்லாச்சு - இதை
மறுப்பதற் கில்லையது மெய்யாச்சு!

# கனியிருக்கக் காயெதற்கு ?

நல்வார்த்தை பல உண்டு
நாவினிக்கப் பேசுதற்கு
நயமில்லா வார்த்தைகளேன்
நம் மொழிகளாகிடணும்?
நல்வழிகள் பல உண்டு
நலமுடனே வாழ்வதற்கு
தீய வழிதொடர்ந் தேன்
தீ வினையில் வீழ்த்திடணும்?

அன்பான முறைகளுண்டு
அயலவரோடு உறவுகொள்ள
பண்பு முறை விடுத்தேன்
வம்பை விலை கொண்டிடணும்?
துன்பம் துயர் துடைக்க
தூய பல வழிகள் உண்டு
இன்ப வழிகளென்றேன்
இடர் வழியில் வீழ்ந்திடணும்?

உரமுள்ள உடல் இருக்கு
உழைத்து நாம் உண்பதற்கு
தரங் கெட்ட செயல் புரிந்தா
தரணியில் நாம் வாழ்ந்திடணும்?
புறஞ் சொல்லி வாழ்வதினால்
புகளென்றும் கிடையாது
அறஞ் செய்து வாழ்வதினால்
அருள் வளங்கள் பெற்றிடலாம்!

# சொல்லும் சேதி என்ன

அதிகாலையில் கூவும் சேவல்
அறிவிக் கின்ற சேதி என்ன?
அதிகாலையில் எழுந்து நாமும்
அறிவைக் கற்க வேண்டுமென்று

காகம் கரைந்து கூட்டங்கூடி
காதில் சொல்லும் சேதி என்ன?
கற்ற அறிவை மற்றவர்க்கும்
கற்றுக் கொடுக்க வேண்டுமென்று

சிற்றெறும்பு நிரையிற் சென்று
செப்புகின்ற சேதி என்ன?
புத்தி யுள்ளோர் பொறுப்புடனே
பணிகள் புரிய வேண்டுமென்று

சிலந்தி வலை பின்னிப்பின்னி
சொல்லுகின்ற சேதி என்ன?
கலங் கிடாமல் முயற்சி செய்தால்
காரியம் நிறை வேறுமென்று

வீட்டில் நாயும் வாலை யாட்டி
விளங்க வைக்கும் சேதிஎன்ன?
காட்டும் நன்றி உணர்வுடையோர்
நாட்டிற் பெருக வேண்டுமென்று.

கூட்டிற் கிளி யும் கோவை வாயால்
கொஞ்சு கின்ற சேதிஎன்ன?
கேட்ட படி வாழ்ந்து நாமும்
நாட்டி லுயர வேண்டுமென்று

உயர்ந்த வானில் பறக்கும் பருந்து
உரைத்து நிற்கும் சேதிஎன்ன?
உயர்ந்த கொள்கை உடைய வராய்
வாழ்வில் உயர வேண்டுமென்று

# விடியல்

ஆண்டாண்டு கால மாக
அமைத்து வாழ்ந்த இல்லிடங்கள்
முண் டெழுந்த போரினாலே
முடமாகிப் போ னதுவே
மாண்டார் சுடு காடாய்
மாறி விட்ட நிலையினிலே
வேண்டாத அகதி நிலை
விரைந்து வந்து புகுந்ததுவே

அஞ்சியஞ்சி வாழ் வெமக்கு
அர்த்த மின்றிப் போனதுவே
பஞ்சம் பசி எம்மவர்க்கு
பழக்க மாகிப் போனதுவே
துஞ்சுதல் எம் மினத்தின்
தொடர் கதை யாகியதே
வஞ்சக ஆட்சி யெம்மை
வதைப் பதிலே மகிழ்கிறதே.

விடி வொன்று கிடைக்காதா?
விடு தலையின் மக்களுக்கு
அடி பிடிகள் ஓயாதா?
அமைதி வந்து பிறக்காதா?
முடி வொன்று வாராதா?
முன் வாழ்வைத் தொடர்வதற்கு
விடி வெள்ளி பூக்காதா?
விடியலை நாம் காண்பதற்கு

# தலைவன் ஒரு …

பாலோடு தேன் கலந்து
பருகும் அமுதம் போல்
நூலோடு மனங் கலந்த
நூலாளன் இதயம் போல்
அன்போடு மக்கள் தம் குறையறிந்து
ஆர்வமா யதுதீர்க்க வழியறிந்து
தோளோடு தோள் நின்று
துயர் களையும் தோழன்!
அலையிடையே கலம் போல
ஆடிவரும் வாழ்க்கை யிலே
வலையிடையே மீன் போல
வகை யறியா வேளையிலே
மலையிடையே வீழ்ந்து வண்டல்
மண் கொணரும் நதிபோல
தலையிடு செய்து மக்கள்
தழை யறுப்போன் தலைவன்!
கானல் கண்டு நிதம்
களைப் புற்ற மான்போல
வேனல் கண்டு நிதம்
விரக்தி யுற்ற மக்களுக்கு
வானின் குளிர் மழைபோல
வாழ் வளிக்கும் வகையாளன்
கான் லெம பயணத்தில்
காண் பரிய வழிகாட்டி!
அல்லும் பகிலன்றும் அயராத
அப்பழு[illegible]ண பாளன
தொல்லை பலவரினும் துணிவுடன்
தொடரும் நற் பணியாளன்.
எல்லை வரையிடாத சேவையாளன்
யாவரையும் ஈர்க்கின்ற கடமையாளன்
சொல் வீரனல்லத் தலைவன்
செப்பரு கரிய செயலவீரனே!

# முத்தமிழ்

ஞாலம் தோன்றிய போதே - இறை
ஞானமாய்ப் பிறந்த எம் தமிழ்
சீலம் மேவுபுகழ் வேந்தர் - மூவர்
சீராட்டி வளர்த்த தீந்தமிழ்
காலமகள் எமக்குக் கதியாக ஈந்த
கம்பன் வள்ளுவ தாசர்களின்
மூலம் வளர்ந்து வானுயர்ந்த - எம்
முத்த மொழியாம் முத்தமிழ்

சங்கத்தில் அமர்ந்து நடம்புரிந்த
சங்கீதமான எம்தமிழ்
பொங்கும் இயலிசை நாடகமாய்
மங்கா தொலிக்கும் செந்தமிழ்
திங்கள் ஒளியெனச் செகத்திலெல்லாம்
சங்கா யொலிக்கும் பைந்தமிழ்
எங்கள் உயிரினுமரிய உயிர்த் தமிழைக்
கண்போல் காப்ப தெம்கடனே

அன்னை தமிழினைப் போற்றிவோம்
அன்பால் சேவை புரிந்திடுவோம்
இன்பத் தமிழிசை விளக்கினையே
இளையோர் நாமும் ஏற்றிடுவோம்
பொன்னினும் புகழினும் மேலாக
எம்முயிர்த் தமிழைப் காத்திடுவோம்
முன்னையோர் செய்பணி தொடர்ந்திடுவோம்
முத்தமிழ் வாழ உழைத்திடுவோம்

# எழுச்சிகொள்வோம்!

கல்வி எங்கள் உயிராகும் - அதைக்
கண்போல காத்தலெம் கடனாகும்
பலவகைத் தடைகள் வந்தாலும் - அதைப்
பழுதின்றிக் காத்திட எழுச்சிகொள்வோம்!

கல்வி எமக்கு மூலதனம் - அதைக்
கருத்தாய கற்போம் நாளுந்தினம்
கல்வியே எமக்கு ஆயுதம் - அது
இல்லையேல் நாம் வெறுங் காகிதம்

கல்வியே எமக்கு வாழ்வாகும் - கற்ற
கல்வியை வாழ்வதே சிறப்பாகும்
நல்லவை கற்பதே அறிவாகும் - அவை
நலமுறக் கற்பதே தெளிவாகும்

தளர்ச்சிகள் வளர்ச்சியின் தடைக்கற்கள் - மாணவ
எழுச்சிகள் வளர்ச்சியின் படிக்கற்கள்
முயற்சிகள் உயர்ச்சியின் படிக்கற்கள்
எழுச்சி கொள்வோம் நாம் எழுச்சி கொள்வோம்

கற்பதே எமக்கு போராட்டம் - அந்த
போராட்டமே எமக்குக் கற்றுத்தரும்
போர்ப்படை யெம்மை எதிர்த்தாலும் - அதைப்
புறமிட்டு வெல்ல எழுச்சி கொள்வோம்!

# எங்கே சுதந்திர ஒளி பிறக்கும்?

மெல்லப் பகை இருள் விலக
    மீண்டும் அமைதி ஒளிகண்டு
உள்ளக் கமலங்க ளெல்லாம்
    உவகையால் மலர்ந்து மகிழ்ந்து நிற்க
நல்ல கால மொன்று வருமென்று
    நாடே எதிர் பார்த்து நிற்க
சொல்லம்பு வீடும் கயமிகளால்
    சுதந்திர ஒளி எங்கே பிறக்கும்?

வானொளி மண்ணில் பிறந்தது
    ஞானியர் இடையர் கண்டுகொண்டார்
மா மன்னன் ஏரோது மமதையுற்றான்
    மாசில்லாக் குழந்தைகள் மரணமுற்றார்
விண் பொறை கொண்டான் மாமன்னன்
    விளைந்தது பேரளிவே மிச்சம்
உண்மையை அழிக்க முயற்சிசெய்தால்
    எங்கே சுதந்திர ஒளி பிறககும்?

# பதறாத காரியம்

காரியம் பதறாத செய்கை
சீரிய செம்மையாய் அமையும்
வீரியம் பேசி நின்றாலும்
விவேகமே வெற்றியைச் சூடித்தரும்
யாரிடம் தோழமை கொண்டாலும்
யதார்த்தமே நட்பைக் தேடித்தரும்
பாரிலே பண்பாக வாழ்ந்திடப்
பொறுமை நல்வழி சமைத்திடும்

செயற்கரிய காரியம் வேண்டின்
செயலமைதி யாகிட வேண்டும்
முயல் வீரனாயிருந்தும் போட்டியில்
செயல வீரன் ஆமையே வென்றது
உயர்ச்சியை அடைந்திட வேண்டின்
உறுபயிற்சி ஒழுங்காக வேண்டும்
அயர்ச்சியை எமதாக்கிக் கொண்டால்
அல்லலே தொல்லையாய் தொடரும்

புண்பட்டவன் உள்ளம் பண்பட்டது
புடமிட்ட பொன்னும் கனமிக்கது
கண்பார்க்கும் செய்கை திடம்மிக்கது
கருத்தில்லாச் செய்கை நிறைவற்றது
மண்புகுந்த விதையே மரமாயாகும்
மலருகின்ற மலரே மணமும் வீசும்
பண்பான வாழ்வே பாரிற்சிறக்கும்
பதறாத காரியம் செயலாய் முடியும்

# ஓ மானிட சமுதாயமே!

உன்னைத்தான் கேட்கிறேன்!
ஒரு கணம் சிந்திக்க மாட்டாயா?
உழுத்துப்போன மரபுகளையேன்
பிடித்துக் கொண்டிருக்கிறாய்?
கருத்தில்லா வற்றுக்கேன
காரணம் சொல்லுகிறாய்?
நன்றல்லாத வறறையேன்
நலமெனப் போற்றுகின்றாய்?
உண்மையில்லாத வற்றுக்கேன்
உளம் மகிழுகின்றாய்?
போலியான வற்றுக்கேன
வர்ணம் பூசுகின்றாய்?
வேலியாய் இருக்க வேண்டிய நீ
ஏன் வெள்ளாடாய் மாறுகின்றாய்?
தடுக்கி விழுந்தவனை ஏன்
எழும்பவிடாது தடுக்கின்றாய்?
அடுக்கி யடுக்கி அவன்மேல் ஏன்
அபாண்டம் சுமத்துகின்றாய்!
கொடுக்க வேடுண்ம தண்டனை?
என்று ஏன் கொலைக்குற்றம் சுமத்துகின்றாய்?
குற்றம் செய்வதற்கு அவன் மட்டுமோ காரணம்?
சுற்றம் நாற்றத்தில் மிதக்கையிலே
சுத்தம் பேசுவதில் அர்த்தமில்லை!
மற்றவன் மேல குற்றம் சுமத்தும் நீ
நித்தம் நலலவை நினைத்தா லென்ன?
சித்தம் செயலினில் பதித்தாலென்ன?
புத்தம் புதியவை புனைந்தா லென்ன?
யுத்தம் மறைந்திட உழைத்தாலென்ன?
அத்தனையும் நீ உணர்ந்தா லென்ன?
அமைதிக்கு வழி வந்து பிறக்காதோ?

# என்று தணியும்?

என்று தணியும் இந்த
இனப் புயல் வேகம்?
என்று கலையும் இந்த
போர்ப் பறை மேகம்
என்று கனியு மெங்கள்
விடுதலைக் காலம்? அதைக்
கண்டு மகிழ்ந்து நாம்
களிப்புறுங் காலம்!
பயன் தந்து உதவிடும்
விளை நிலம் யாவும்
வளர் பயிர் எழில
எப்போது தவழ்ந்திடு காலம்?
அலைந் துலைந்திடும்
எம்மவர் வாழ்வு
அமைதி காணவே
எப்போ கனிந்திடும் காலம்?

# அழிந்திடாச் செல்வம்

கல்வியைப் போலொரு அழிந்திடாச் செல்வம்
கண்டது முண்டோ உலகினிலே?
தொல் புகழ் பெருமை பெற்றவ ரெல்லாம்
துலங்குவ தின்று எதனாலே?
வல்ல வராக உயர்ந்தவ ரெல்லாம்
வளர்ச்சி பெற்றது எதனாலே?
பல்வகைச் சாதனை படைத்த வெல்லாம்
படித்த கல்வியின் அறிவாலே!

விந்தைகள் புரிந்திடும் விஞ்ஞான மெல்லாம்
வியாபித்து நிற்பது எதனாலே?
சிந்தையில் கல்வியைச் சிறப்புடன் பெற்றவர்
செய்கின்ற நற் பணியதனாலே!
மந்தைகள் போல வளர்பவ ரெல்லாம்
மாறிட வேண்டுமே அறிவாலே!
வந்தனை செய்திடாய் வாலறிவன் தன்னை
நூலறிவால் பெற்ற கொடையாலே!

கற்றவர் புகழுக்கு எல்லையே இல்லை
கல்லாதவர் படுவார் பெருந் தொல்லை!
உற்றவர் கூடச் சொல்லிடு வார்கள்
உறவினரல்ல ஊரவ ரென்று!
கற்றவர் மலைபோல உயர்ந்திடு வார்நிதம்
மற்றவர் தலையிலிழிந்த மயிரனையார்!
நற்சமுதாயம் வளர்ந்திட வேண்டின்
கற்றவர் பெருகிட வழியது வேண்டும்.

# ஏன் இன்று இந்த நிலை?

முந்தை முந்தையாய் இந்த மண்ணினை
ஆண்ட பரம்பரை நாங்கள்
சிந்தை குளிர்ந்திட வந்தவர்க் கெல்லாம்
கொடுத்த பரம்பரை நாங்கள்
சங்கமமைத்துத் தங்கத் தமிழ்மொழி
வளர்த்த பரம்பரை நாங்கள்
தங்கத் தமிழர் தாய்மொழி இன்று
மங்கிமடிவதை மறைந்தும் வாழ்வதேனோ?
உண்டு கெட்டவனல்லத் தமிழன் - அவன்
உவப்புடன் உண்டு இட்டவன்
வண்டு கட்டிப் பானையில் தானியம்
சேர்க்கக் கண்டு விட்டவன்
பண்டு தொட்டு இந்த மண்ணிலே - வாழ்ந்து
எல்லாம் பழகி விட்டவன்
நன்றி கெட்டவன் என்ற நாமஞ்சேர்க்கவே - இந்த
நானிலத்திலே எப்போ மாறிவிட்டவன்?
நாடு வளம் பெறக் காடுகள் திருத்திக்
களனிக ளாக்கிய நாங்கள்
நாடுகள் தேடி நாடி வாழ்ந்திட
நாய்போல் அலைவது மேனோ?
நாடிழந்தவன் நாடி வந்திட
நன்மைகள் செய்தவர் நாங்கள்
ஓடி ஓடியிந்த ஒடுக்கும் ஆட்சியில்
கேடு கெட்டது மேனோ?

சிந்தை மந்தமாய் போன செல்வரே - கொஞ்சம்
எந்தை மண்ணினைப் பாரும்
சந்தி சந்தியாய் நாம கதையளந்து - எம்
காலங் கழிந்ததும் போதும்
சிந்திப்போம இனிச் செயற்படுவோம்-நல்ல
செயற்கரிய பல செய்திடுவோம்
எந்தையர் பணி இடைவிடாது நாம்
என்றுந் தொடருவோம் வாரும.

# இரும்பாகும் கரும்பாகும்

சமுதாயச் சோலை யெல்லாம்
மணங் கமழ வேண்டுமெனில்,
இளம மலர்கள்
இதழ்விரிக்க வேண்டும்
அமுதான மழலைகள்
அலங்கரிக்க வேண்டுமெனில்,
அகம் அன்பால்
நிறைந்திருக்க வேண்டும்.
வருங்காலச் சிற்பிகள
வளர்ந்தோங்க வேண்டுமெனில்.
வலிய கரம்
வழிசமைக்க வேண்டும
களம் புகுந்து கல்விக்கடல்
நீந்திவால் வேண்டுமெனில்,
கற்றறிந்த ஆசானின்
நற்றுணையும் வேண்டும.
இளமை யெனும் காட்டாறு
இழந்திடாது சக்தியினை,
திறன் என்ற அணைபோட்டால்
பயன சேர்க்கும் பாரினிற்கே.
சாசனத்தில் உரிமைகள்
சான்று களாய் இருந்திடாது
ஆசாசனத் திருந்தவைகள்
அணி செய்ய வேண்டும்.
ஆரும்பென்று பெரியோரைத்
தூக்கியே எறிந்திடாது.
துணையாக்கி வழி சமைத்தால
இணையாகா அவநறவு எதற்கும்.
அரும் பென்று இளையோரை
அகற்றியே விட்டிடாது
விருப்போடு வழிசமைத்தால்.
இருமபாகும் இளம சக்தி
கரும்பாகும் அவர் பணிகள

# இரகசியம்

களங்க மில்லாப்பார்வை
கனிவான வார்த்தைகள்
உணர்வுள்ள செயற்பாடு
உவகை தரும் உள்ளம்
விடுதலைக்கு
இவையெல்லாம் வித்துக்கள்

என்னுள் சென்று நான்
எண்ணில செய்யும் மாற்றங்கள்
உள்ளத்து விடுதலைக்கு
உந்துதலாய் அமைந்துவிடும்

அறிதலால் ஆர்வமும்
உணர்வதால் ஊக்கமும்
ஊக்கத்தால் செயறபாடும்
விடுதலைக்கு வழி சமைக்கும்

உண்மையைத் தேடுதல்
உண்மையைக் கண்டடைதல்
உண்மையைச் செயற்படுத்தல்
உயர்வுக்கு வழிகாட்டும்,

தவறுகள் திருத்தப் படவேண்டும்
நியாயப் படுத்துவதால்
நிகழ்காலம் நடந்திடாலம்
நிம்மதிக்கு வழியேயில்லை.

உணர்வுகள மதிக்கப்பட்டால்
உறவுக்கு வழி பிறக்கும்
உறவுகள் பேணப்பட்டால்
வாழ்வுக்கு வழிபிறக்கும்
உறவுகள் பகிரப்பட்டால
விடுதலைககு வழிபிறககும்.

# உயர் வாழ்வு

உள்ளத்து விடுதலையே
உயர் வாழ்வின் இரகசியம்
பள்ளத்தில் தேங்கும் நீர்
பல நோயை வரவழைக்கும்
வெள்ளத்து நீர் போல
கள்ளமில்லா வாழ்வு
அள்ளிக் கொடுத்து நிற்கும்
அக வாழ்வு விடுதலையை.

வெள்ளைக் கமலத்தேன்
விருந்தறியா மண்டூகம் (தவளை)
உள்ளத் தெளி யதுவே
வாக்கினிலே தவழ்ந்து வரும்
கொள்ளை விதைத்து விட்டு
நெல்லை எதிர் பார்க்கலாமோ?
உள்ளத்து விடுதலையே
உயர் வாழ்வைத் தந்து நிற்கும்

# ஆண்டவனும் அகதிதான்

எந்தையர் மண்ணின் மக்கள்
ஏழைய ரானா ரின்று
வந்ததே வறுமைப் போரும்
வாட்டியே வதைக்கின்றதே
சொந்தமனை, மக்களிழந்தார்
சொத்துசுக மனைத்து மிழந்தார்
கந்தைகள் தானே மிச்சம்
கதியின்றித் தவிக்கின்றாரே!

ஆண்டுகள் ஈராயிரம் முன்னே
ஆளகுடிக் கணக்கின் நாளில்
மாண்புடை கற்ப மரியுடன் சூசை
மனையிடம் தேடி யலைந்தனரே
கண்ணியர் என்றிட யாரும்
கருணை உள்ளவர் அங்கேயில்லை
எண்ணியே ஆவின் குடிலேகினர்
ஏழ்மையில் இறைமகனும் பிறந்தாரே

எல்லாம் படைத்தவர் ஏழையானார்
ஆண்டவனே யங்கு அகதியானார்
பொல்லா வுலகம் போர்தொடுக்கும்
நல்லோர் வாழ்வைச் சீர் கெடுக்கும்
கல்லான் மலையையும் நகர்த்திடலாம்
கடுகளவு விசுவாச முண்டேல்
சொல்லா லல்ல செயல் புரிவோம
அல்லற் படுவோர் துயர்களைவோம்

# சத்திய வேள்வி

மண்ணில் வீழ்ந்தழியும் விதையாலே
மலர்வதோ புத்துயிர்ப்பு
விண்ணில் கூடிவரும் முகிலாலே
மண்ணில் குளிர்ந்த மழை
கண்ணில் சேர்ந்திருக்கும் இமையாலே
கருவிழிக்குப் பாதுகாப்பு
உன்னில் இருக்கும் நான். அழிந்தால்
உள்ளத்தில் புத்துயிர்ப்பு

இத்தரை மீதினில் தாயவள் செய்வதோ
ஈடில்லாப் பெரு வேள்வி
நித்திரை மறந்து பட்டினி கிடந்து
புத்திரரைக் காக்கின்றாள்
தத்துவ வேள்விகள் செயவதினாலே
தர்மம் நிலைத்திடுமா?
சத்திய வேள்விகளாலே புவியினில்
நித்திய உயிர்ப்பு உண்டாம்.

உலகத்தை மீட்க இயேசு
உதிரத்தால் வேள்வி செய்தார்
கலகமே மூண்ட வேளை தம்
கருணையைக் காட்டி நின்றார்
பெலமின்றி வீழ்ந்த வேளை இறை
பெலத்தையே பாரிற் தந்தார்.
வலப்பக்கக் கள்வனுக்கு இயேசு
வான்வீட்டை உயிர்ப்பாய்த் தந்தார்

# எத்தனை முறையும் மன்னிக்கலாம்

இறைசித்தம் தனையே ஏற்று
இப்புவி மீது வந்து
மறை ஞான வெளிப்பாடாய்
மலைப் பொழிவில்
மதனி மாண்பின்
மன்னிப்பின் பெருமை சொன்னார்.
குறை காண ஒரு கூட்டம்
கூடி வந்த வேளையிலே
தேடிவந்த வழிதனிலே
எடுத்த கற்கள் போட்டுவிட்டு
ஏற்றுத் தம் பிழைகளையே
மாறறங்கண் டேகினரே.
கொடுத்த வாக்குறுதியை மறந்து
கோணல் புத்தியினாலே
கொட்டி விட்டார் இராயப்பர்,
கோமகனை மறுதலித்தார்
எட்டி நின்றழுத ஈரவிழிகண்டு
தட்டிக் கொடுத்தார் இயேசு
தவறை உணர வைத்தார்

கத்தி வாளுடன் ஒரு கூட்டம்
கடவுள் மகனைத் தேடியது
முத்தம் கொடுத்து
தத்தம் செய்தான் ஒரு நண்பன்
பித்தனையும் மன்னித்தார் பிரபு,
இரத்தம் பழிவிடுமா அவனை,
சித்தம் கலங்கியே நாண்டு செத்தான்
இத்தனையும் போகா தென்று
எத்தனை கொடுமை செய்தார்
முள்ளில் முடிசூடி
எள்ளி நகையாடி
மூர்க்கத் தனம் செய்து
ஏற்றினார் சிலுவையிலே,
தூற்றினார் துரோகக் கும்பல்
மாற்றினாரில்லை
மறைவள்ளல் தன்வழியை.
சாற்றினார் சாகும் வேளையிலும்
சகலரையும் மன்னியும் தந்தா யென்று,
எத்தனை முறையும் மன்னிக்கலாம்
கர்த்தனைப் போல் நமக்கும்
கனிந்த உள்ள மிருந்தால்.

# ஆசிரியர்

நற்சமுதாயத்தின் நாயகர்கள் - இவர்கள்
நலமிக்க போதனையின் காவலர்கள்
கற்றதைக் கொடுப்பதில் ஆர்வலர்கள் - இவர்கள்
கடவுளின் நேரடிச் சேவகர்கள்
குற்றம் நீக்கிடும் குணக்குன்றுகள் - இவர்கள்
குறைகள் மன்னிக்கும் அரும்பண்புகள்
சுற்றஞ் சூழ்ந்திடும் அருந் தொண்டுகள் - இவர்கள்
கற்றதினாலே இத்தனை மாண்புகள்.

எண்ணரிய நூல்கள்பல கற்றவர்கள்
எழுத்தறிவிக்க இறைவனும் பெற்றவர்கள்
கண்கள்தான் ஆசிரியன் கல்விக்கு
கல்லாதான் வாழ்வதுவீண் உலகிற்கு
ஈன்றோரிற் பெரியோன் ஆசிரியன்
இகத்திலே அவர் பெரும் சான்றோன்
பண்புகள் ஊற்றெடுக்கும் உறைவிடம்
மாண்புதான் இவர்சேவைக் கிரீடம்

குன்றின்மேல் ஒளிர்கின்ற தீபங்கள்
குன்றாத ஒலிகொடுக்கும் நாதங்கள்
தன்னலங் கருதாத தகையோர்கள்
முன்னறிந்து செயற்படும் வகையோர்கள்
குன்றெனவே உயர்நதோ ரெலலாம்
குருவாலே உயர்ந்தவரே யுண்மை
நன்றியோடவர் செயலகள் நினைந்து
நலமுற வாழ்வதே அவரிற்குப் பெருமை.

# மாதவம் செய்ததோ?

பல்லவி

மாதவம் செய்ததோ மாடடை குடில்
மாபரன் மண்ணிலே வந்து பிறந்திட

சரணம்

கீழ்த்திசை வானிலே வெள்ளி தோன்றிட
வாழ்த்திசை பாடியே வானோர் மகிழ்ந்திட
ஆயர்கள் அறிந்தனர் தொழுவம் விரைந்தனர்
அறிஞர்கள் பரிசுடன் பாதம் பணிந்தார்
(மாதவம்)

மாளிகை மன்னனும் மனங் குனம்பினான்
மமதையால் மழலைகள் மரணமாகின
பழியினைச் செய்பவன் பழியைத் தேடுவான்
அழிவினை விடுப்பவன் அமைதிகாணுவான்
(மாதவம்)

அமைதியின் மன்னனாய் உதித்தபாலனை
அமைதியைத் தேடுவோர் பணிந்து வணங்குவோம்
அமைதிதான் அகிலத்தின் அழகு தேவதை
அமைதியாய் அவனியில் அமைதிவேண்டுவோம்

# பல்கலை ஏறாத பல்துறைஞானி

கல்வி மேம்பாடும் கஷனி மேம்பாடும்
கலந்த நிறை நற் குடியில்
நல்லறிவுப் பிள்ளையாய் ஞானப் பிரகாசம்
நல்லகல்வி தான் பெற்று வளரும் நாளில்
வல்லபரன் வகுத்ததிரு மறையிற் புகுந்து
வண்டமிழும் வளம் பெருக வழிகள் செய்தார்
பல்கலையும் துணியாத துறைபல கண்டார்
பல்கலை ஏறாத பல்கலை ஞானி

ஏழைகள் மேல் இரங்கி அவர்
ஏழ்மை நீக்க இடம் அளித்து
வாழ்வுப் பயணத்தின் வழி சமைத்தார்
அறியாமை ஆன்மீக இருள்கள் நீக்கி
தோழமையாய் எஞ்ஞான்றும் துணையாயிருந்து
தொண்டினிலே உயிர்மூச்சை கொண்டுவாழ்ந்த
ஈழம் தந்த ஏற்றமிகு சுவாமி
ஞானப் பிரகாசரை நாம் மறக்கலாமோ?

ஆங்கிலமும் ஆன்றறிவும் ஒருங்கே பெற்று
அழகுதமிழ் மொழியினுக்கு அணிகள் செய்தார்
பொங்கும் சாதிமுறைப் புன்மை நீங்க
புதிய குடியேற்றங்கள் அமைத்துக் கொடுத்தார்
மங்காத சொற்பிறப் பொப்பியல் அகராதியால்
மகனாகித் தமிழன்னைக்கு மகிட மிட்டார்
எங்குந் தமிழ் மணக்கும் காலமெல்லாம்
எம்ஞானப் பிரகாசரைப் போற்ற வேண்டும்!

# பெலிக்கான்பறவை

அல்பேனிய நாட்டு
அருட்கன்னி மலரொன்று
இந்திய மண்ணை
இரக்க முடன் நேசித்தது.
வெள்ளை நிலா ஒளிக்கீற்று
சேரிக்குளத்தை நிறைத்ததினால்
அநாதை அல்லிகள் மலர்ந்தன
தெருவோரத்தின் காகிதக குப்பைகள்
அன்னை இல்ல ஆலையில் சேர்த்து
அழகிய நூல்களாய் வெளிவந்தன
விட்டில் பூச்சிகள் விளக்கினை விடுத்து
ஒளி கொடுத்திடும் திரி மெழுகாகின
மரணத்தைச் சுமந்த வீதி இல்லத்தோர்
"நிர்மல் கிருதா'யில் நிம்மதியாய் மரித்தனர்.
குப்பைத் தொட்டில் பாலர்கள் எல்லாம்
சிரித்து மகிழ்ந்தனர் "சிசுபவனில".
தொழுநோய் கண்டு தூர ஒதுங்கியோர்
மறுவாழவு கண்டனர் "சாந்திநகரில்"
மணமாகாது தாய்மையடைந்தோர்
மனம் நிறைந்தனர் அன்னை இல்லத்தில்.
இத்தனை பணி செய்ய எப்படி முடிநதது
ஆரம்பப் பணியே ஐந்தே ரூபாய் தான்
ஆண்டவன் துணைதான் அவளின் வெற்றி
காறி உமிழ்ந்தனர் கனவான்கள் கைகளில்.
எதிர்ப்புக்கள் ஆயிரம -
எதிர் வந்து நின்றன
காலம் சுழன்றது பனிபோல் மறைந்தது
உதவிகள் ஆயிரம் குவிந்தன
உலகமே போற்றி வியந்தது
பரிசுகள் கொடுத்து மகிழ்ந்தனர்
இத்தனை பெருமைக்கும் யாரிவர்
வாழ்வு கொடுக்கச் சாவைத் தேடிய
தெரேசா என்ற பெலிக்கான்பறவை

# பாரதிகள் பிறந்திடவேண்டும்

பாரதிகள் பலர் பிறந்திட வேண்டும்
பாரதிக் கவி புனைந்திட வேண்டும்
போரழிவால் புதுயுகம் சிதையும்
சீரழிவை அவர் தடுத்திட வேண்டும்

காடழிந்து கன மழை குறைந்து
நாடழியும் நிலை செப்பிட வேண்டும்
விடழிந்து விடு தலை அழியும் முறை
பாடறிந்து இவர் ஓதிட வேண்டும்

கேடிதுவா? கெட்டித்தன மிதுவா?
வாடுபவர் துயர் மறைய வேண்டும்
கூடும்வரை இந்தக் குறை களைய
சாடியே உரை பகர்ந்திட வேண்டும்

பிழைகளெல்லாம் சரியென் போருக்கு
அழிவின் நிலை உணர்த்த வேண்டும்
சரிகளெல்லாம் பிழையென் போருக்கு
விளைவின் நிலை விளக்க வேண்டும்

பொய்மை கண்டும் புற முது கிடுவோருக்கு
உண்மை நிலை ஊட்ட வேண்டும்
செய்யும் துறைகளில் ஐயம் வரின்
சேர்ந்த புலமையோர் துணை பெற வேண்டும்

அடக்கியே ஆழுவோர் நிலைகண்டு
அடம்பன் கொடி யாக மாறு
முடங்கி டாதே முதுபெருஞ் சொத்தெல்லாம்
அடங்கியே சூழ் புகுந்திட நேரும்

திடமுடனே நெஞ்சில் துணிவுகொள்
படமெடுத் தாடும் நாகம போல்
உடனே செயறபட முடிவு கொள்
மடமை யாவுமே ஒழிந்து ஓடும்

# ஏன் ஏற்பதில்லை

ஏன் இறைவன் உன் செபத்தை
ஏற்பதில்லை நீ அறிவாயோ?
தேன் அமுதச் சொல்லாலே
தேவனை நீ புகழுகின்றாய்!
ஊன் உருவக் கிறீஸ்துக்களை
உதாசீனம் நீ செய்கின்றாய்!
வான் உலகில் உறைபவன்
அருள்வானோ வரம் உனக்கு?

கான மிசைக் கின்றோம்
காதினிற்கும் இனிமை தான்!
தானமும் கொடுக் கின்றோம்
தரணியோர் அதைப் புகழத்தான்!
போன கணத் திருந்து
பொருத் தனைகள் செய்கின்றோம்
ஞானம் இருந்தால் கொஞ்சம்
எமை மட்டும் நினைப்போமா?

எல்லோரும் நம் சோதரர்கள்
எம்மவர்கள் என் கின்றோம்
நல்வார்த்தை நவின்று நாமும்
நாவினிக்கப் பேசு கின்றோம்
வல்லோரும் உள்ளோரும் வழித்தோன்றல்
மற்றெல்லாம் புல்லோர் என்கின்றோம்
சொல்வார்த்தை தவறியே வாழும்
நம்வரத்தை கொள்வானோ இறைவன்


# பத்தாண்டில்

சத்தியத்தின் திருமறையாம் கத்தோலிக்க
    ஆசிரிய குழாமொன்றாய்ச் சேர்ந்தேயிங்கு
கத்தாதி கர்த்தனவர் கருணையினாலே
    கடமையென் றேற்றே கடைப் பிடித்திவர்கள்
முத்தான கலவியொடு மறைப்பணி யதையும்
    முன்னின் றாற்றுவது முறையேயாகும்
வித்தாக இவர்விதைக்கும் விதைகளெல்லாம்
    விளைவாகிப் பலன் கொடுக்கும் விந்தைபாரீர்!

இறைவேத மியம்புகின்ற செய்திக ளெல்லாம்
    இயன்ற வரை எல்லோரு மறிந்து வாழ
மறை வேதாகமக் கண் காட்சிகளும்
    மறையறிவில் தேர்ச்சிபெறப் போட்டிகளும்
மறையுடனே கிளைகள் மூலம் நடத்தியிவர்கள்
    முயற்சிவென்றா ரதிலே உயர்ச்சி கண்டார்
நிறைவான இவர்கள் பணி தொடர்ந்து நீள
    துறையாவுங் கடந்தோனே துணையாகுவாய்

அன்னை யாமெம் இன்பத்தமிழ் மொழி
    அகில மெல்லாம் புகழ்மணக்க
தன்னையே செந் தமிழுக களித்த
    தனிநாயக அடிகளுக்கு விழா வெடுத்தார்
முன்னையோர் செய்தபணி முழக்கஞ் செய்த
    பின்னையோ ரிவர் பணியும் பெரும்பணியே
உன்னத பணிதனை உவந்தே செய்யும
    உப்புத்தான் இவர்கள் உலகினிற்கே!

வித்தென்று இயேசு பிரான் விளக்கஞ் சொன்ன
    விலைமதியா விவிலியத்தின் வார்த்தைகளையே
பத்தென்றும் நூறென்றும் பலனே கொடுக்க
    பண்படுத்தும் பயனுள்ள உழவனிவர்கள
பத்தாண்டு கடந்தும பரிணமித் தினனும்
    முத்தாக ஜொலிப்ப திவர் முயர்ச்சியதே!
ஒத்தாசை கொண்டிதனை வளரச் செய்தால்
    ஒளிகொடுக்கும் வழிகாட்டும் உண்மையுண்மை



மன ஓசைகள் ஆசிரியர் அபீராஜன் அவர்களை நான் நன்கு அறிவேன். மன்னார் மாதோட்டத்தைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் திருமண பந்தத்தின் மூலம் யாழ்மண்ணோடு இணைவு பெற்ற இளங்கவிஞர். அன்ரனி பீற்றர்(ராஜன்) என்ற இயற் பெயருடைய இவர் கவிதைத் துறையிலே ஆர்வம் கொண்டவர். இவருடைய கவிதைகள் பாதுகாவலன், உதயம், சஞ்சீவி, ஈழநாதம், புதிய உலகம் போன்றவற்றில் வெளிவந்து, வாசகர் களின் மதிப்பையும் பெற்றுள்ளன. இவர் சிறுவர் பாடல்களையும், சிறு நாடகங்களையும் ஆக்கியுள்ளார். இவரின் முயற்சிகள் பாராட்டுக்குரியவை.

தற்போது சமய, சமூக விழிப்புணர்வுப்பார்வையோடு ஆசிரியர் இந்தக் கவிதைகளை வடிவமைத்திருப்பது இவரின் சமய சமூகப் பற்றை வெளிக் காட்டுகின்றது.

கத்தோலிக்க கலை, இலக்கிய வட்ட பொருளாளராகப் பணியாற்றுகின்ற இவர் ஓர் ஆசிரியர். அண்மையில் கலை மாணிப்பட்டமும் பெற்றுள்ளார். இவரின் இலக்கியப் பணியில் மேலும் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டு சமூகப்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

அருட்திரு. R. C.X. நேசராஜா
யாழ். மறைக்கல்வி
இயக்குனர்